**<u>தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்</u>**

| | |
|---|---|
| அனுப்புநர்<br>திரு. ம.ரா. மோகன். இ.ஆ.ப., (ஓய்வு),<br>ஆணையர்,<br>தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்,273, அண்ணாசாலை,<br>தேனாம்பேட்டை, சென்னை-600 018. | பெறுநர்<br>அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள் |

ந.க.**1590**/2015/கூ.தே-1 நாள்:19.11.2015

அய்யா/அம்மையீர்,

பொருள்: கூட்டுறவுத் தேர்தல் – மாவட்டத் தேர்தல் அலுவலருக்கு தேர்தல் தொடர்பான வழிகாட்டுதல் மற்றும் அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

*****

**1988**ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதி எண் **52(1)** (b) மற்றும் **52–** A(4)ன்படி ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட தேர்தல் திட்டத்தில் கண்ட சங்கங்களின் தேர்தல்களை நடத்த மாவட்டத் தேர்தல் அலுவலர் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுவதுடன் அத்தேர்தல்களை நடத்த ஒத்துழைத்து, மேற்பார்வையும் செய்வதுடன் தேர்தல் ஆணையத்தால் மாவட்டத் தேர்தல் அலுவலருக்கு ஒப்படைக்கப்பட்ட இதர செயல்பாடுகளையும் செய்திடல் வேண்டும் என்பதையும் மாவட்ட தேர்தல் அலுவலரால் நியமிக்ககப்பட்ட தேர்தல் அதிகாரிகள் (Electoral Officer மற்றும் Election Officer) தேர்தல் ஆணையத்தின் கண்காணிப்பு, உத்திரவு மற்றும் கட்டுப்பாட்டுக்குட்பட்டு மற்றும் மாநில தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்டத் தேர்தல் அலுவலரின் கண்காணிப்பு மற்றும் வழிகாட்டுதலின் கீழ் சட்டம் மற்றும் விதிகளில் கண்டுள்ளவாறும், தேர்தல் ஆணையத்தால் அவ்வப்போது வழங்கப்படும் உத்திரவுகள் அல்லது வழிகாட்டுதல்களின்படியும் சரியான முறையில் தேர்தல்கள் நடத்துவதற்கு சட்டபூர்வமான கடமைகளுக்குட்பட்டவராவர் என்பதையும் மாவட்டத் தேர்தல் அலுவலர்களாகிய நீங்கள் நன்கு அறிவீர்கள்.

கூட்டுறவுத் தேர்தல்கள் தொடர்ந்து நடைபெறும் நிகழ்வாகும் என்பதனை ஆனைவரும் அறிவர் (Continuous Process). எனவே அவ்வப்போது உங்களால் நியமிக்கப்படும் தேர்தல் அலுவலர்கள் அனைவரும் தங்களது சட்டபூர்வ கடமைகள் மற்றும் பொறுப்புகள் அனைத்தையும் முற்றிலும் அறிந்திருப்பார்கள் எனக் கொள்ள இயலாது. இந்நிலையில் அவர்களது சட்டபூர்வ கடமைகளையும் பொறுப்புகளையும் அவர்கள் தங்களது பணி ஆணைகளைப் பெற்றிடும்போதோ அறிந்திருப்பதும், கட்டாயமாக அறியச் செய்வதும் மிகவும் அவசியமானதாகும்.

இவ்வகையில் மாவட்டத் தேர்தல் அலுவலரால் வழங்கப்படும் தேர்தல் அலுவலர்களுக்கான (Electoral Officer and Election Officer) நியமான ஆணையுடன் அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டிய முக்கியமான வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுரைகளும் தனியாக வழங்கிட வேண்டியது அவசியமென்று தேர்தல் ஆணையம் கருதுகின்றது.

**...2**

எனவே இத்துடன் இணைக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுரைகளை மாவட்ட தேர்தல் அலுவலரகளால் வழங்கப்படும் தேர்தல் அலுவலர்களின் நியமன ஆணையுடன் கண்டிப்பாக சேர்த்து வழங்கிட அறிவுறுத்தப்படுகிறது.

இதனைப் பெற்றுக் கொண்டதற்கான தங்களது ஒப்புகையினை (acknowledgement) மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு 30.11.15க்குள் அனுப்பிடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**(ஒம்../–)**
**ஆணையர்**

**நகல்:**

மாநில தேர்தல் அலுவலர்கள்,
தங்கள் கட்டுப்பாட்டின் கீழ்வரும் அனைத்து மாவட்டதேர்தல் அலுவலர்களுக்கும் இது தொடர்பான உரிய அறிவுரைகள் வழங்கிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.